ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1715/32 - 2011 ජූලි 22 වැනි සිකුරාදා - 2011.07.22
*1715/32 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ. 21/78.*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 24அ என்னும் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள்
ஆணைக்குழு.

கொழும்பு,
*2011, யூன் 28.*

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைப் பிரிவு (திருத்தக்) கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 2002, நவெம்பர் 15 ஆந் திகதிய 1262/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைப் பிரிவு கட்டளைச் சட்டம் அதன் 18 ஆம் பந்தியில் அப்பந்தியின் (1) ஆம் உப்பந்தியினை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உப்பந்தியினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(1) பின்வருவன தொடர்பில் நிலையங்கள் தாபிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) உயர்தர டிஜிட்டல் ஊடகத் தொழில்நுட்பவியல் ;
(ஆ) மின் - கற்கை;
(இ) வெளிவாரிப்பட்டங்கள்;
(ஈ) கணிப்புச் சேவைகள்
(உ) உயர்தொழில் அபிவிருத்தி ; அத்துடன்
(ஊ) டிஜிட்டல் சட்ட மருத்துவவியல்.".

*08-214/1*

*ச.வ.பீ. 21/78.*

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் (2)(iii) ஆம் உட்பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்டதும் 1979 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 63/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான 1979 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நியமனங்கள் (பதவியுயர்வுகள்) கட்டளைச்சட்டம் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2011, யூலை 01.

8 - 214/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.